මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: BD/CBP/4/1/9 - 2017
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2016.12.28

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 05/2016**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**செலவின அங்கீகாரம் மற்றும் பொது செலவின முகாமைத்துவம்**
**வரவு செலவுத்திட்டம் 2017**

**01. செலவினத்தினை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்**

2016.12.10 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நியதிகளுக்கமைவாக 2017 ஆம் ஆண்டின் போது செலவினத்தினை மேற்கொள்வதற்கு அரசியலமைப்பின் 150(1) ஆம் உறுப்புரையின் நியதிகளுக்கமைவாக கௌரவ நிதியமைச்சர் ஆணைப்பத்திரங்களில் கையொப்பமிட்டுள்ளார்.

இதற்கமைவாக, அதிகாரமானது கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) பொதுவான சேவைகள் தொடர்பாக - 2017 இன் 1 ஆம் இலக்க பொது ஆணைப்பத்திரம்.
(ஆ) விசேட சட்ட விடயங்கள் தொடர்பாக - 2017 இன் 1 ஆம் இலக்க விசேட சட்ட அதிகாரம்.
(இ) முற்பணக் கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக - 2017 இன் 1 ஆம் இலக்க முற்பண ஆணைப்பத்திரம்.

**02. பொது செலவின முகாமைத்துவம்**

அரசாங்க வருமான வரையறை மற்றும் பேரண்டப் பொருளாதார இலக்குகள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு தாபிக்கப்பட்ட ஏற்கத்தக்க வகையிலான செலவின வரையறைகளின் அடிப்படையில் 2017 வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. எனவே, பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள், வழங்கப்பட்ட செலவின வரையறைகளுக்குள் தமது செலவினத்தினை திட்டமிட்டு முகாமை செய்வதற்கு வேண்டப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள், முழு வருடத்திற்குமான செலவின வரையறைகள் தொடர்பாக தீவிர கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 2.1 காலாண்டு செலவின வரையறைகள்

காலாண்டு செலவின வரையறையினை தாபிப்பதற்கும் அதனை 2017.01.13 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கும் கவனம் செலுத்துமாறு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 2.2 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துதல்

2017 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் உரிய நிறுவனங்களுக்கு தனித்தனியாக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2016 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவதன் முன்னேற்றமானது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினைவிட குறைந்த நிலையில் தொடர்ந்து காணப்படுவதனால் வருடத்தின் முதல் காலாண்டிற்குள் கொள்வனவு நடைமுறைகளை நிறைவு செய்வதற்கு சனவரி ஆரம்பத்திலிருந்து உரிய நடவடிக்கையினை எடுக்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்கள் வழங்கப்பட்ட கால அவகாசத்திற்குள் ஒவ்வொரு செயற்பாட்டினையும் (பணிகள்) நிறைவு செய்வதற்கான பொறுப்புக்களை எடுப்பதற்கு குறிப்பீடு செய்யப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். மேலதிகச் செயலாளர் அல்லது அவரது தகுதியினையொத்த அலுவலரொருவர் அனைத்து வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளையும் மீளாய்வு செய்வதற்கும் பொதுத் திறைசேரியுடனும் ஏனைய அங்கறை செலுத்துநர்களுடனும் ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு இனங்காணப்பட்ட அலுவலரின் தொடர்பு விபரங்களை 2017 சனவரி 10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் என்றவகையில் அமைச்சுக்களின் செயலாளர்கள் இச் செயன்முறை பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2017 இன் அனைத்து வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்குமான வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் 240-2-2 கருத்திட்டத்தின் (குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களுக்கு இந்த ஒதுக்கீடுகளை அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 2.3 மேலதிக ஒதுக்கீடுகள்

வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் அங்கீகாரிக்கப்படாத அல்லது இனங்காணப்படாத புதிய கருத்திட்டங்களை அல்லது செலவின விடயங்களை செயற்படுத்துவதற்கு எவ்வித மேலதிக ஒதுக்கீடும் வழங்கப்பட மாட்டாது. அங்கீகார செயன்முறை பின்பற்றப்பட்டிருக்குமாயின், அத்தகைய கருத்திட்டங்கள் / செலவின விடயங்களுக்காக 2018 – 2020 நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகத்தின்கீழ் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

## 2.4 செலவினங்களின் முகாமை

நிதி ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைவாக, ஏதாவதொரு செலவின அர்ப்பணிப்பினை மேற்கொள்வதற்கு முன்னர் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவது அவசியமாகும். வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் எதுவுமின்றி மேற்கொள்ளப்படும் ஏதேனும் செலவின அர்ப்பணிப்பு தொடர்பான பொறுப்பினை பொதுத்திறைசேரி ஏற்றுக் கொள்ளாது என்பதுடன் அத்தகைய செலவின அர்ப்பணிப்புகளை மேற்கொண்ட தொடர்புடைய அலுவலர்கள் தனிப்பட்ட வகையில் பொறுப்பேற்றல் வேண்டும். மேலும், புதிய செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் தற்பொழுது இருக்கும் செலவினங்களை செலுத்துவதற்கு நிதி ஏற்பாடுகள் போதியளவில் / பயன்படுத்த முடியுமான வகையிலிருத்தல் வேண்டும். இதற்கமைவாக, 2016 இற்கான

செலுத்தப்படாத செலவினங்கள் 2017 இல் புதிய செலவினங்களை மேற்கொள்வதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

**03. கட்டுநிதி வேண்டுதல் மற்றும் விடுவிப்பு**

செலவிடல் முகவர்களின் உண்மையான காசுத் தேவைப்பாடு தொடர்பாக பொதுத் திறைசேரிக்குத் தெரியவரும் சந்தர்ப்பத்தில், திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் கிரம அடிப்படையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வாராந்த காசுப்பாய்ச்சல் தேவையினை எதிர்வு கூறுவதன் சரியான தன்மையில் இது தங்கியுள்ளது. காசுப்பாய்ச்சல் பற்றாக்குறை காணப்படும் சந்தர்ப்பத்தில் முதலாவது நிதி வழங்கப்பட வேண்டிய தேவைகளுக்கு மிகவும் முன்னுரிமை வழங்குவதனை உறுதிப்படுத்துவதற்கு காசுப்பாய்ச்சலினை முறையாகக் கண்காணிப்பதே இதன்மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது. இதற்கமைவாக, வழங்கப்பட்டுள்ள மாதிரியில் கட்டுநிதி தேவையினை தனியாகக் குறிப்பிடுமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் வேண்டப்பட்டுள்ளது. மேலும், கொடுப்பனவு தேவைப்பாட்டு விபரமானது ஒவ்வொரு மூலதன செலவினக் குறியீட்டின் கீழும் தனியாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**04. மனிதவள முகாமைத்துவம்**

வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல 2/2016 – வரவு செலவுத்திட்ட அழைப்பு 2017 இன் 3(ஆ) ஆம் பந்தியின் கீழ் நிறுவனங்களின் முறையான பணி மதிப்பீடொன்றினை தயாரிப்பதற்கான அறிவுறுத்தல் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சில நிறுவனங்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தவில்லை. எனவே, மேற்குறித்த சுற்றுநிருபத்தின் பால் உங்களது கவனத்தினை மேலும் ஈர்ப்பதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்தாலோசனை செய்து உங்களது அமைச்சு/ திணைக்களம் / நிறுவனத்தினது பங்களிப்பு மற்றும் பணிகளினை அடிப்படையாகக் கொண்டு முறையான வேலை மதிப்பீடொன்றினை தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**05. முற்பணக்கணக்கு செயற்பாடு**

முற்பணக்கணக்குச் செயற்பாடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

**06. தெளிவுபடுத்தல்கள்**

இச்சுற்றுநிருபத்தின் உள்ளடக்கம் தொடர்பாக ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (தொடர்பு இல. 011 – 2484665)

ஒப்பம் / ஆர்.எச்.எஸ்.சமரதுங்க
திறைசேரி செயலாளர்

பிரதிகள் :

i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவையின் செயலாளர்
iv. கணக்காய்வாளர் நாயகம்